
சிங்களம் கற்போம்

வழிகாட்டி நூல்

Learn Sinhala : Guide Book



By:-தி.திபாகர்

9 786242 104539

சிங்களம் கற்போம்

வழிகாட்டி நூல்

Learn Sinhala: Guide Book

ஆசிரியர்

தி.திபாகர்

ජාතික පුස්තකාල හා ප්‍රලේඛන සේවා මණ්ඩලය
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
National Library and Documentation Services Board

NATIONAL LIBRARY OF SRI LANKA
NLSL

බුද්ධශාසන, ආගමික හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs

මගේ අංකය / எனது எண் / My Ref. 65-5-01

ඔබේ අංකය / உமது எண் / Your Ref.

දිනය / திகதி / Date

ප්‍රකාශකගේ විස්තරය

ප්‍ර.හැ.අ / முன்னொட்டுட் எண்/ Prefix No : 624-210 ප්‍ර.වි./ Prefix Type : PAP

ප්‍රකාශකගේ නම/ வெளியீட்டாட் ளர் பெயர்/ Publisher's Name: Thiyananthan Thibakar

අනු අංකය/ வரிசை எண்/ Serial No: IS47874

ප්‍රකාශකගේ ලිපිනය /வெளியீட்டாட் ளரின் முகவரி /Publisher's Address : Joseph Vaz Nagar, Thoddaveli, Mannar

දිනය திகதிDate : 2026-03-11

ISBN අංක /No of ISBN : 1

ගෙවූ මුදල රු . /Total Amount Rs. : 404.00

ISBN අංක සමඟ පොත් විස්ර / ISBN உடன் புத்தக விவரங்கள் / Book Details with ISBN :

# කර්තෘ / Author	ග්‍රන්ථ නාමය / Book Name	ISBN	Bar Code
1. Thibakar, Thiyananthan	Singalam katpom: valihattinool (சிங்களம் கற்போம்: வழிகாட்டி நூல்)	ISBN 978-624-210-453-9	9 786242 104539

ISBN/ISSN/ISMN ජාතික මධ්‍යස්ථානය
ජාතික පුස්තකාල හා ප්‍රලේඛන සේවා මණ්ඩලය
දුරකථන : 011-2687583, විද්‍යුත් තැපැල : isbnsrilanka@mail.natlib.lk

+94 11 2698847, 2688855 +94 11 2685201 info@mail.natlib.lk www.natlib.lk

අංක 14, නිදහස් මාවත, කොළඹ 07 ශ්‍රී ලංකාව
இல.14, சுதந்திர வழி, கொழும்பு 07 இலங்கை
No. 14, Independence Avenue, Colombo 07 Sri Lanka

நூலின் பெயர்	-	சிங்களம் கற்போம் : வழிகாட்டி நூல்
ஆசிரியர்	-	தி.திபாகர்
மொழி	-	தமிழ், சிங்களம்
பதிப்பு	-	முதற்பதிப்பு *(2026)*
வெளியீடு	-	ஆசிரியர் வெளியீடு
நூல் அளவு	-	*A5*
பக்கங்கள்	-	*x, 94*
விலை	-	*300.00 LKR*
ISBN	-	*9786242104539*

491.488 THI	திபாகர், தி சிங்களம் கற்போம் : வழிகாட்டி நூல் / தி. திபாகர்.-மன்னார்,*2026.* *x, 94* பக் *; 15cm* *ISBN-978-624-2104-53-9* *1* திபாகர்,தி *2* தலைப்பு *3* வழிகாட்டி நூல்கள்

உள்ளடக்கம்

முன்னுரை

மொழி என்பது மிக முக்கியமான மற்றும் மனிதனுக்கு அத்தியாவசியமான ஓர் கருத்துப் பரிமாற்ற ஊடகமாகும். காரணம் மொழி வளர்ச்சிபெற்ற பின்னரான மனித சமூகத்தின் வளர்ச்சி மற்றும் பரிணாமம் மிகப்பெரியதும் மிகத் துரிதமானதுமாகும்.

சிங்கள மொழி என்பது இலங்கையைப் பொறுத்தமட்டில் பெரும்பான்மையான மக்களால் உபயோகிக்கப்படும் ஓர் ஊடக மொழியாகும். இதைத்தவிர சிங்கள மக்கள் செறிந்து வாழும் பல்வேறு நாடுகளிலும், உலக நாடுகளிலும் சிங்கள மொழியின் தேவை அவசியமானதாகும்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட எமக்கு சிங்கள மொழியானது இரண்டாம் மொழியாக இலங்கையில் காணப்படுகின்றது.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எமக்கு சிங்கள மொழியானது மிக இலகுவான ஓர் கற்றல் மற்றும் புரிந்துணர்வு மொழி என்பதனை நீங்கள் கருத்தில் கொள்ளுங்கள். காரணம் சிங்கள மொழியும் தமிழ் மொழியும் அடிப்படையில் பல்வேறுபட்ட ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. இதனால் எமக்கு தமிழ் மொழியைப் போலவே சிங்கள மொழியையும் மிக இலகுவாகக் கற்று, உபயோகித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்த மனத்திடனை முதலில் நீங்கள் உருவாக்கிக் கொள்ளுங்கள். காரணம் மனதின் திடனே கற்றலின் ஆரம்பம்.

இந்த **"சிங்களம் கற்போம் – வழிகாட்டி நூல்"** என்ற தலைப்பை உடைய நூலில் சிங்கள மொழியை எவ்வாறு புரிந்துகொள்ளவேண்டும் என்ற வழிகாட்டிப் பதிவுகளும், சிங்கள மொழியின் மிக அத்தியாவசியமான வழிகாட்டிக் குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன.

இதன் ஊடாக நீங்கள் மிக மிக இலகுவாக சிங்கள மொழியைக் கற்றுக்கொள்ளலாம். அது மாத்திரமன்றி நீங்கள் சிங்களம் கற்பதற்கான மிக முக்கிய உந்துதலாகவும், புதிய கற்றல் அணுகுமுறையை உங்களுக்கு தந்துதவும் ஓர் ஊடகமாகவும் இது அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இந்நூலில் சிங்கள மொழி என்றால் என்ன என்பதைப் பற்றிய விளக்கம் முழுமையாக தரப்பட்டுள்ளது. காரணம் எம்மில் பலர் சிங்கள மொழியை கற்காது தட்டிக்களிக்கக் காரணம் சிங்கள மொழி எப்படிப்பட்டது என்ற அடிப்படைப் புரிதல் இல்லாமையே ஆகும். அடுத்து இந்நூலில் எப்படிச் சிங்களம் கற்ற வேண்டும் என்ற அடிப்படை வழிகாட்டல்கள் தரப்பட்டுள்ளன. காரணம் பலரும் சிங்கள மொழியை மனனம் செய்து ஒப்பிக்கும் நடைமுறை ஊடாகவே சிங்கள மொழியை கற்க முனைகின்றனர்.

இது முற்றிலும் தவறான ஓர் நடைமுறையாகும். மனனம் செய்து ஒப்பிக்கும் நடைமுறையானது கணிதத்தரவுகளை குறிப்பாக வாய்ப்பாடுகள் மற்றும் சமன்பாடுகளை கற்க உதவுமே தவிர நாம் அன்றாடம் பயன்படுத்தும் மொழிசார் விடயங்களிற்கு இது பொருத்தமானதாக அமையாது. எனவே இந்த கற்பித்தல் முறையை மாற்றி சரியான கற்பித்தல் நடைமுறைகளை பின்பற்றுவதற்கான அடிப்படைக் குறிப்புக்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

சிங்கள மொழியினதும், தமிழ் மொழியினதும் ஒற்றுமைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். குறிப்பாக சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழியில் காணப்படும் எழுத்துக்களின் ஒற்றுமை, சொற்களுக்கு இடையிலான ஒற்றுமை என பல விடயங்களைப் பற்றி இதில் கலந்துரையாடல் செய்துள்ளேன். இதனூடாக நீங்கள் சிங்கள மொழியை மிக இலகுவாக கற்க வாய்ப்பு ஏற்படும்.

அடிப்படையான சிங்கள சொற்கள் மற்றும் அவற்றிற்கான அர்த்தங்களை விளக்கிக் கூறியுள்ளேன். அத்துடன் ஒவ்வொரு சொல்லுக்குமான உச்சரிப்பு, அர்த்தம், வசன உருவாக்கம் என ஆழமாக குறிப்பிட்டுள்ளேன். காரணம் சொற்களை மட்டும் தந்து சென்றால் அது அகராதியைப்போல ஆகிவிடும். இந்நூலை நான் ஓர் பூரண வழிகாட்டியாக உருவாக்க முனைந்துள்ளேன்.

அடிப்படைச் சிங்கள வசன அமைப்பைப் பற்றியும், எவ்வாறாக நாம் வசனங்களை அமைக்கலாம் என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளேன். இது உங்களுக்கான பேச்சு சிங்கள பயிற்சிக்கு மிக உறுதுணையாக அமையும்.

இந்நூல் சிங்கள மொழியை கற்ற விரும்பும் உங்கள் அனைவருக்கும் உதவிகரமான ஓர் வழிகாட்டியாக அமையும் என நான் நம்புகின்றேன்.

இப்படிக்கு
ஆசிரியர்

சிங்கள மொழி எப்படிக் கற்க வேண்டும்?

சிங்கள மொழி என்றால் என்ன?

சிங்கள மொழி என்பது இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் மொழியாகும். வங்காள மொழி, பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளுடன் நெருங்கிய இனத்தொடர்பைக் கொண்டதும், மலையாள மொழியின் அசைவு நுட்பங்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டதுமான ஓர் மொழியாகும். இது தமிழ் மொழியுடன் மிக நெருங்கிய தொடர்புடையது. காரணம் தமிழ் மொழியின் பல சொற்கள் சிங்கள மொழியில் அப்படியே உருமாற்றம் பெறாது பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக அம்மா என்றால் சிங்கள மொழியிலும் அம்மா என்றே அழைக்கின்றனர். அக்கா என்றால் சிங்கள மொழியிலும் அக்கா என்றே அழைக்கின்றனர். எனவே சிங்கள மொழி என்பது கற்க அல்லது புரிந்துகொள்ள கடினமான ஓர் மொழி அல்ல. அதிலும் குறிப்பாக தமிழ் மொழி தெரிந்த எமக்கு சிங்கள மொழி கற்பது மிக மிக இலகுவான காரியம் ஆகும்.

சிங்கள மொழி கற்பதால் ஏற்படும் பயன்கள்.

ஓர் விடயத்தை நாம் கற்றுக்கொள்ள ஏதோ காரணம் காணப்படும். குறிப்பாக அது எமக்கு ஏதோ ஒரு வகையில் உதவுகின்றதாக இருப்பதாலேயே நாம் கற்றலை மேற்கொள்கின்றோம். உதாரணமாக நாம் முகாமைத்துவம் தொடர்பாக கற்கின்றோம் என வைத்துக் கொள்ளுங்கள். முகாமைத்துவம் சார்ந்த திறன்களை ஏதோ ஓர் இடத்தில் நாம் பிரயோகிக்க வேண்டும் என்ற ஓர் அவசியத்தை மனதில் நிலை நிறுத்தியே முகாமைத்துவக் கற்கையை நாம் மேற்கொள்ளுவோம்.

அந்த வகையில் சிங்கள மொழி கற்பதால் ஏற்படும் பயன்கள் என நாம் பலவற்றைக் குறிப்பிடலாம். அடிப்படையாக சிங்கள மக்களுடன் ஓர் நல்லுறவைப் இதனூடாகப் பேண முடியும்.

சமூக ஊடகங்கள் மற்றம் முதன்மைத் தகவல் வளங்களின் ஊடாக வெளியாகும் செய்திகளின் உண்மைத்தன்மையை அலசி ஆராய முடியும்.

குறிப்பாக இன்னுமோர் மொழிபெயர்ப்பாளரால் அல்லது மொழிபெயர்ப்பு ஊடகத்தால் மொழிபெயர்க்கப்படும் செய்திகளைத் தவிர்த்து நாமே செய்திகளின் உண்மைத்தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

நீங்கள் பணி புரியும் வேலைத்தளங்களில் பதவி உயர்வு மற்றும் பணியிட மாற்றம் போன்றவற்றை இலகுவாக பெறுவதற்குச் சிங்கள மொழி ஓர் உறுதுணையாக விளங்கி நிற்கின்றது.

கடந்த காலங்களில் வெளியாகிய மற்றும் தற்போது வெளியாகும் வேலைவாய்ப்புக்கள் தொடர்பான அறிவித்தல்களைக் கவனித்துப் பாருங்கள். அதில் இரு மொழி பற்றிய கருத்துக்கள் வினவப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். அதற்காக முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதையும் நீங்கள் அவதானித்திருக்கலாம்.

*உதாரணமாக "**தமிழ் மற்றும் சிங்கள மொழி தெரிந்திருத்தல் சிறப்பானது**" என்றவாறான அறிவித்தல்கள் வேலைவாய்ப்பு தொடர்பான அரச மற்றும் தனியார் நிறுவன அறிவித்தல்களில் காணப்படும். குறிப்பாக மொழிபெயர்ப்பாளர் பதவி, நிறுவன வரவேற்பாளர் பதவி, முகாமைத்துவம் சார் பதவிகள் மற்றும் கள ஆய்வு தொடர்பான பல்வேறுபட்ட பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்களில் இது வினவப்பட்டிருப்பதை நீங்கள் அவதானிக்கலாம்.*

அது மாத்திரமன்றி ஓர் பயணத்தை சிறப்பானதாக மாற்ற சிங்கள மொழி உதவி புரிகின்றது. உதாரணமாக வவுனியாவில் இருந்து கொழும்பிற்கு செல்வதாக வைத்துக்கொள்ளுங்கள். இந்த பயணத்தை நீங்கள் தமிழ் மொழி தெரிந்திருந்தாலேயே பயணித்துக் கொள்ள முடியும்.

ஆயினும் சிங்கள மொழி தெரிந்திருந்தால் மிக இலகுவாக பயணத்தை மேற்கொள்ளவும், பயணத்தில் எமது தேவைகளை சரியாக வெளிப்படுத்திக் கொள்ளவும் அத் தேவைகளை மிக இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளவும் முடியும்.

அரச மற்றும் தனியார் வேலைத்தளங்களில் சேவைகள் மற்றும் பலன்களைப் பெற்றுக்கொள்ள சிங்கள மொழி உதவி நிற்கின்றது. உதாரணமாக நீங்கள் காலியில் உள்ள ஓர் பிரதேச செயலகத்திற்கு ஓர் சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்கிறீர்கள் என வைத்துக்கொள்ளுவோம். அங்கே மிக இலகுவாகச் சேவையைப் பெறுவதற்கு சிங்கள மொழி உதவி புரிகின்றது.

சிலர் சிந்திப்பது எவ்வாறு எனின் சிங்கள மொழிபேசத் தெரிந்தால் மட்டும் போதுமானது என்பதாகும். சிங்கள மொழி பேசத்தெரிந்திருத்தல் மட்டும் போதுமான மேலதிக திறனாக கருதப்பட மாட்டாது.

காரணம் எந்தக் கற்கை நெறி அல்லது பயிற்சி ஆயினும் அது தொடர்பான காகித சான்றிதழ் எமது திறனை உறுதிப்படுத்த மிக மிக முக்கியமானது. சிங்கள மொழியைப் பொறுத்தவரை நீங்கள் கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களத்தில் சித்தி பெறுவது மேற்படி விடயங்களிற்கான அடிப்படைத் தகைமையாக கொள்ளப்படும்.

இவ் அடிப்படை தகைமையினைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்துக்கள், சொற்கள் மற்றும் அடிப்படை இலக்கணம் என்பவை மிகுந்த உதவி புரிகின்றன.

வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதிலும் எமது திறன்களை வளர்த்துக் கொள்வதிலும் முன்னிலை வகிக்க எமக்கு மொழி சார் திறன் உதவி நிற்கின்றது.

எனவே மேற்படி விடயங்களில் இருந்து சிங்கள மொழி கற்பதால் ஏற்படும பயன்கள் சார்ந்த அடிப்படை புரிதல் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்று நம்புகின்றேன்.

அது மாத்திரமன்றி நீங்கள் கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களத்தில் சித்தி பெறுவது மாத்திரமன்றி அதனைத் தொடர்ந்து கல்விப் பொது தராதர உயர்தரம், டிப்ளோமா கற்கைகள் என பல இரண்டாம் மொழி சிங்களம் சார் தகமைகளைப் பெறுவது மிக மிக அத்தியாவசியமானதும் உங்கள் எதிர்காலத்திற்கு உதவிகரமானதாக இருக்கும் என்பதனையும் மனதில் கொள்ளுங்கள்.



சிங்கள மொழி கற்றல் கற்பித்தலில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள்.

சிங்களம் எனப்படுவது ஓர் மொழி. எமது கருத்துக்களை ஒரு நபருக்கு எடுத்துச் சொல்லும் ஓர் ஊடகமாகும். பல நபர்கள் தமது சொந்த மொழி மீது கொண்ட பற்றினால் பிற மொழிகளையோ அல்லது பிற கலாச்சாரங்களையோ புரிந்து கொள்வதனையோ அல்லது அதனைப்பற்றிக் கற்பதையோ விரும்புவதில்லை. இந்தக் கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் ஓர் மொழி எனப்படுவது ஓர் பிரமாண்ட ஆற்றல்.

ஓர் நாகரிகத்தன் வளர்ச்சி மற்றும் தோற்றத்துடன் ஓர் மொழி அளப்பரிய பங்கு வகிக்கின்றது. அது மற்றய மனிதரிடம் நாம் நேரடியாக கலந்துரையாடி எமது கருத்துக்களை அவர்களுக்கு தெரிவிக்க உதவி நிற்கின்றது. அப்பேற்பட்ட பேராற்றல் உள்ள மொழியைக் கற்க மறுப்பது எமது வெற்றிச் சந்தர்ப்பங்களை நாமே தடுப்பதற்கு சமமாகும்.

வரலாற்றை எடுத்துக்கொள்ளுங்கள். பன்மொழி வித்தகர்கள் உலகையே தமது மொழி ஆற்றலினால் தம்வசப்படுத்தியுள்ளனர். நாம் வேறு எங்கும் செல்லத்தேவையில்லை. அயல் நாடான இந்தியாவில் உள்ள **மஹ்மூத் அக்ரம்** என்பவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? தனது பத்தொன்பது வயதில் கிட்டத்தட்ட நாற்பத்தாறு மொழிகளில் சரளமாகப் பேசவும், நானூறு மொழிகளிற்கு மேல் எழுதவும், வாசிக்கவும், தட்டச்சுச் செய்யக்கூடியவராகவும் இருந்தார்.

நம்மில் பலர் இவரைப்பற்றி கேள்விப்பட்டவுடன் **“இவர் அசாத்திய திறமை கொண்டவர். நாம் சாதாரணமான நபர்கள். எம்மால் எப்படி இவ்வாறாக பன்மொழியைப் பயன்படுத்தி பேசவும், எழுதவும், தட்டச்சுச் செய்யவும் முடியும்?”** என எண்ணிக்கொள்ளக்கூடும். இந்த எண்ணம் முற்றிலும் தவறானது. காரணம் எம் அனைவராலும் சாதனைகள் புரிய முடியும். நாமும் பல்வேறு துறைகளில் சாதிக்க முடியும். எம்மாலும் பல திறன்களை வெளிப்படுத்த முடியும்.

எம்மால் நாற்பத்தாறு மொழிகளில் பேச, எழுத மற்றும் வாசிக்க முடியாவிட்டாலும் கூட எமது நாட்டில் உள்ள ஓர் பிரதான மொழியாகிய சிங்கள மொழியையாவது பேசவும், எழுதவும், வாசிக்கவும் தெரிந்து வைத்திருப்பது மிக மிக அவசியமானது அல்லவா?.

சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இரண்டாம் மொழியாக சிங்களம் கற்பது எமக்கான ஓர் கேடயம் போன்றது. ஆம் சிங்கள மொழி இலங்கையைப் பொறுத்தவரை தமிழ்மொழி பேசும் எமக்கு ஓர் கேடயம் போன்றது.

காரணம் பல்வேறுபட்ட சமூக, அரசியல் காரணிகள் மக்களிடையே குழப்பம் மற்றும் தெளிவின்மையை ஏற்படுத்தக் காரணம் மொழிப்புரிந்துணர்வின்மை மற்றும் கருத்துத் தெரிவிக்கும் முறை புரியாமையே ஆகும். அதாவது ஓர் நபர் கூறும் விடயத்தை புரிந்து கொள்வதற்கும், எமது கருத்துக்களை மற்றைய நபருக்கு சரியாக வெளிப்படுத்தி தெளிவு மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்தும் முறை தெரிந்திராமையே ஆகும்.

இவற்றை இல்லாதொளிக்க ஒரே ஒரு சந்தர்ப்பம் எமக்கு உண்டு. அது யாதெனில் சிங்கள மொழியை நாம் பயில்வதாகும். பூரணமாக பயிலாவிடினும் எமது தேவைக்காக பயன்படும் அளவிற்கேனும் பயில வேண்டும். அத்துடன் எமது எதிர்கால சந்ததியினருக்கும் இரண்டாம் மொழியைக் கற்பதன் அவசியத்தை வலியுறுத்தி கற்பித்தலை ஊக்கப்படுத்த வேண்டும். இதனூடாக சிங்கள மக்களுடனான எமது நல்லுறவைப் பேணிப் பாதுகாக்க முடியும்.

இந்த நிலையில் சிங்கள மொழியை எவ்வாறு கற்கலாம் என்ற ஓர் கேள்வி உங்களுக்கு ஏற்படலாம். காரணம் கடந்த பல காலமாக பாடசாலைகளில் கூட சிங்கள மொழியை கற்பிப்பதற்கு போதுமான ஆசிரியர்கள் அற்ற நிலைமை தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் காணப்படுகின்றது. சிங்கள மொழி தெரிந்த பெரும்பாலான நபர்கள் கற்பிக்கத்தக்க திறனுடன் காணப்படுவதில்லை.

பாடசாலைகளிலும் கூட சிங்கள மொழி கற்பித்தலைப்பற்றிய ஓர் விழிப்புணர்வோ அல்லது ஊக்கமோ மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுவது சற்றுக் குறைவாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக சிங்கள மொழி கற்கும் ஆர்வம் உள்ள ஒரு மாணவன் கூட சிங்கள மொழி கற்க இயலாத சூழ்நிலையை எதிர்கொண்டு தனது கற்றல் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யாது பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்கின்றான்.

பாடசாலைக் கல்வி பூர்த்தியான பின்னர் கல்லூரிக்கோ அல்லது இரண்டாம் நிலைக் கற்றல் நிலையங்களுக்கோ சென்று தனது கல்வியைத் தொடர்ந்தாலுங்கூட அங்கும் சிங்கள மொழியைக் கற்க முடிவதில்லை. இவ்வாறாக பல காலமாக இந் நிலை தொடர்ந்தால் சிங்கள மொழியைப் பற்றிய புரிதல், கற்பதன் அவசியம் மற்றும் கற்கும் ஆர்வம் அற்ற ஓர் சமூகம் உண்டாக்கப்படக்கூடிய ஓர் நிலை காணப்படுகின்றது.

தற்காலகட்டத்தில் சிங்கள மொழியைக் கற்கும் ஆர்வம் பல மக்களிடையேயும் குறிப்பாக இளம் தலைமுறையினரிடையே ஏற்பட்டாலும் கூட அதனை எங்கு கற்கலாம்?, எவ்வாறு கற்கலாம்? என்ற பல விடை தெரியாக் கேள்விகள் அதிகமாக எழுந்து கற்கும் ஆர்வத்தையே நசுக்கி விடுகின்றன.

உதாரணமாக சிங்கள மொழி கற்பிக்கும் ஓர் கற்றல் நிலையத்திற்குச் சென்றால் அதிக பணம் அறவிடப்படும் சூழல் பெரும்பாலாகக் காணப்படுகின்றது. அதைத்தவிர சுயமாக கற்றலை மேற்கொள்ளத்தக்க நூல்கள் மிக மிகக் குறைவாக காணப்படுகின்றது. இவ்வாறான பல சவால்களைக் கொண்டுள்ளது சிங்கள மொழிக்கற்கை. அடுத்த மிக முக்கியமான சவால் யாதெனில் சிங்கள மொழி கற்பிக்கப்படும் விதம் ஆகும்.

சிங்கள மொழி கற்பிக்கப்படும் விதம்

மொழி எனப்படுவது ஓர் கலை. அதனிலும் குறிப்பாக சிங்கள மொழியை இசை அசைவு கொண்ட மொழி என்று குறிப்பிடுவர். நீங்கள் சிங்கள மக்கள் உரையாடும் விதத்தை அவதானித்துப் பாருங்கள். ஓர் சந்தம், அசைவு, நளினம் பொருந்தியதாக அந்த மொழி காணப்படும். எனவே சிங்கள மொழி ஓர் தாள நயத்துடன் கற்பிக்கப்படவேண்டிய ஓர் மொழி.


நாம் சிங்கள மொழியை கற்க முனையும்போது பலரும் குறிப்பிடும் ஓர் வசனம் "மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்" என்பதாகும். மனப்பாடம் செய்து கொள்ள சிங்கள மொழி வாய்ப்பாடோ அல்லது கணிதக் கோட்பாடோ அல்ல. மாறாக இது ஒரு மொழி. சில முக்கியமான வசனங்கள் மற்றும் சில விதிகளை மனனம் செய்து கொள்ளவேண்டுமே தவிர அனைத்தையும் மனனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

நீங்கள் ஒரு வசனத்தை கற்றால் அதனை கிட்டத்தட்ட பத்து முறைகள் உச்சரித்தோ அல்லது பயன்படுத்தியோ பயிற்சி எடுத்துக் கொண்டீர்களாயின் உங்களுக்கு இயல்பாகவே சிங்கள மொழி பரிச்சயமாகிவிடும். எனவே சிங்கள மொழியை மனனம் செய்வதை நிறுத்துங்கள். அந்தச் சிந்தனையை அகற்றி விடுங்கள். நீங்கள் மனப்பாடம் செய்ய முற்படுவீர்களாயின் அது வானின் எல்லையை அளப்பதற்கு ஒப்பானது ஆகும். ஆம், காரணம் மொழி எல்லையற்ற விடயம் ஆகும். இது சிங்கள மொழியில் மாத்திரமல்ல, எந்த மொழியை நீங்கள் எடுத்துக்கொண்டாலும் இது பொருந்தும். காரணம் மொழி எல்லையற்ற ஓர் ஆற்றல் ஆகும். அத்துடன் மொழி வளர்ச்சியடையக் கூடியதாகும். எனவே சிங்கள மொழி கற்பித்தலில் உள்ள மிக முக்கிய குறைபாடு மனப்பாடம் செய்வது ஆகும்.

சிங்கள மொழி கற்பவர்கள் சிங்கள மொழியை முதலில் சமூகத்தில் பயன்படுத்த ஆரம்பிப்பதே சிங்கள மொழி கற்பதின் முதல் படி.

சமூகத்தில் பயன்படுத்த முதன் முறை கூச்சமாகக் காணப்பட்டால் கண்ணாடி முன் நின்று பயிற்சி பெற்றுக்கொள்ளுங்கள்.

இது உங்களுக்கு சிறந்த பயனைத் தரும். பெரும்பாலான எமது கற்பித்தல் முறைகள் எழுதுகோல்கள் மற்றம் புத்தகங்களுடன் முடிவடைந்து விடுகின்றது. அதனை விடுத்து பயிற்சி மற்றும் களத்தில் பிரயோகிக்கும் ஆற்றல் போன்ற கற்பித்தல் முறைகளுடன் கற்பது சிறந்த பயனைத் தரும். குறிப்பாக சிங்கள மொழிசார் கற்கைக்கு மாத்திரமன்றி அனைத்து விதமான கற்கைகளுக்கும், பாடங்களுக்கும் இக்கற்பித்தல் முறை பொருந்தும்.



சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையிலான ஒற்றுமைகள்

நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போன்று சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் பல்வேறுபட்ட மொழி ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. அந்த ஒற்றுமைகள் பற்றி ஒவ்வொரு வகைகளாகக் காண்போம். இதனூடாக நாம் சிங்கள மொழியை எவ்வளவு இலகுவாக கற்கலாம் என்ற புரிந்துணர்வையும், இலகுவான நுட்பங்களையும் புரிந்துகொள்ளலாம்.

சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையிலான ஒற்றுமைகளை பின்வரும் முறைகளாக நோக்கலாம்

I. *எழுத்துக்களுக்கிடையிலான ஒற்றுமைகள்.- (உச்சரிப்பு மற்றும் வடிவங்கள் சார் ஒற்றுமை)*

II. *சொற்களுக்கிடையிலான ஒற்றுமைகள்.- (உச்சரிப்பு மற்றும் அர்த்தங்கள் சார் ஒற்றுமை)*

எழுத்துக்களுக்கிடையிலான ஒற்றுமைகள்

எழுத்துக்களைப் பற்றிய விரிவான விளக்கம் மற்றும் எழுத்து முறைமைகள் பற்றிய விடயத்தை ஆளமாக பின்னர் நோக்குவோம். இதில் மேல்வாரியாக நாம் எவ்வாறு சிங்கள எழுத்துக்களுக்கு இடையிலான ஒற்றுமைகளைப் பற்றிப் புரிந்து கொள்வது என்பதனைப் பற்றி நோக்குவோம்.

சிங்கள எழுத்துக்களும், தமிழ் எழுத்துக்களும் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. உதாரணமாக தமிழ் மொழி எழுத்துக்களைப் போன்றே பல எழுத்துக்கள் குறிப்பிட்ட சில மாற்றங்களுடன் சிங்கள மொழியிலும் பயன்படுத்தப்படுகின்றன.

I.	ප	-	ப
II.	ය	-	ய
III.	ව	-	வ
IV.	ම	-	ம
V.	ඉ	-	இ
VI.	ඊ	-	ஈ

மேலே குறிப்பிட்ட எழுத்துக்களைக் கவனித்துப்பாருங்கள்.

I *என இலக்கமிடப்பட்ட முதலாவது எழுத்து தமிழில்* ***"ப"*** *என்ற எழுத்தைக் குறிக்கும். கிட்டத்தட்ட தமிழ் எழுத்தும் சிங்கள எழுத்தும் ஒரே வடிவமைப்பை உடையதாகக் காணப்படுகின்றது என்பதனைக் கவனித்துப்பாருங்கள்.*

இவ்வாறாக ***II*** *என இலக்கமிடப்பட்ட* ***"ய"*** *என்ற எழுத்தையும் கவனித்துப்பாருங்கள். கிட்டத்தட்ட தமிழ் எழுத்தை ஒத்ததாகவே காணப்படும். இவற்றைப்போன்றே முறையே* ***III,IV,V*** *என இலக்கமிடப்பட்ட* ***"வ, ம, மற்றும் இ"*** *எனும் எழுத்துக்களை எடுத்து நோக்குங்கள்.*

VI *என இலக்கமிடப்பட்ட* ***"ஈ"*** *எனும் எழுத்தை எடுத்து நோக்குங்கள். தமிழில் நாம் ஈ எனும் உயிர் எழுத்திற்கு இரண்டு புள்ளிகள் இடுவதைப் போன்றே சிங்கள மொழியிலும் காணப்படுகின்றது.*

இவ்வாறாக பெரும்பாலான சிங்கள எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களைத் தழுவியதாகவே காணப்படுகின்றது.

அதனால் சிங்கள மொழியைக் கற்கும் எமக்கு இது மிக இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடியதாக காணப்படும்.

இவை மிகவும் சொற்பமான உதாரணங்களே ஆகும். இதனைத்தவிர பல உதாரணங்கள் உள்ளன. அவற்றை எழுத்துக்கள் பற்றிய கற்கையின் போது நோக்குவோம்.

சொற்களுக்கிடையிலான ஒற்றுமைகள்

நான் ஏற்கனவே **சிங்கள மொழி என்றால் என்ன?** என்ற பகுதியில் குறிப்பிட்டதைப்போன்று தமிழ் மொழியில் உள்ள சொற்களே பெரும்பாலான மாற்றங்கள் இன்றிச் சிங்கள மொழியிலும் பயன்பாட்டில் உள்ளன.

	தமிழ்ச் சொற்கள்	**சிங்களச் சொற்கள்**	**சிங்கள உச்சரிப்பு - தமிழில்**
I.	அம்மா	අම්මා	அம்மா
II.	அக்கா	අක්කා	அக்கா
III.	மாமா	මාමා	மாமா
IV.	தர்மம்	ධම්ම	தம்ம
V.	குடை	කුඩ	குட
VI.	பானம்	පානය	பானய
VII.	சிங்கம்	සිංහ	சிங்க
VIII.	கல்	ගල්	க(G)ல்

இவ்வாறாக தமிழ் மொழியில் உள்ள சொற்கள் பலவும் சிங்கள மொழியில் எவ்விதமான மாற்றமும் இன்றியும், மிகச் சொற்பமான மாற்றங்களுடனும் பயன்பாட்டில் உள்ளன. இவை ஒரு சில உதாரணங்களே. இதனைப்போன்ற பல உதாரணங்களை நாம் சொற்கள் தொடர்பான பகுதியில் பார்க்கலாம்.

இவ்வாறாக சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்குமான ஒற்றுமைகளை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். இவ் உதாரணங்கள் சிங்கள மொழியைக் கற்பது மிக மிக இலகுவானது என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட தரப்பட்ட சில உதாரணங்களே ஆகும்.

அடிப்படைச் சிங்கள எழுத்துக்கள்

சிங்கள எழுத்துக்கள்

அடிப்படைச் சிங்கள எழுத்துக்கள் என்ற இப் பகுதியில் சிங்கள எழுத்துக்கள் பற்றி முழுமையாகக் காண்போம்.

*தமிழ் மொழியைப் போன்றே சிங்கள மொழியிலும் உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள் என்றவாறு காணப்படுகின்றன. தமிழ் மொழியில் **உயிர் எழுத்துக்கள் 12** உம் **மெய் எழுத்துக்கள் 18** உம் காணப்படுகின்றன. **216 உயிர் மெய் எழுத்துக்கள்** காணப்படுகின்றன. இதைத்தவிர **ஆயுத எழுத்து** என "ஃ" என்ற எழுத்தும் காணப்படுகின்றது. ஆகவே மொத்தமாக 247 எழுத்துக்கள் தமிழ் மொழியில் உள்ளன. இதனைப்போன்றே சிங்கள மொழியிலும் காணப்படுகின்றன.*

சிங்கள மொழியில் உயிர் எழுத்துக்கள் 14 காணப்படுகின்றன. 35 மெய் எழுத்துக்கள் காணப்படுகின்றன. எனவே 490 எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்களாக தோராயமாகக் காணப்படுகின்றன. இதனைத்தவிர தமிழைப் போன்றே வட மொழி எழுத்துக்களும் காணப்படுகின்றன.

நான் மேலே குறிப்பிட்ட தொகை தோராயமானதும் நாம் அடிக்கடி பயன்படுத்தும் எழுத்துக்களின் எண்ணிக்கையும் ஆகும். இதனைத்தவிர பல எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஆகவே எண்ணிக்கை மாறுபடும். எழுத்துக்கள் பற்றி தனியாக கற்கும்போது அவற்றைக் காணலாம். இந்த எழுத்துக்கள் முழுவதையும் எவ்வாறு நினைவில் வைத்திருப்பது என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம்.

சித்திரமும் கைப்பழக்கம் என்பதைப்போல பழகப் பழக நாம் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளலாம். அடிப்படையாக எவ்வாறு எழுத்துக்கள் உருவாகின்றன என்பதனைப் புரிந்து கொண்டால் மிகுதி அனைத்தும் மிக இலகுவாக எமக்கு புரிந்து விடும்.

சிங்கள உயிர் எழுத்துக்கள்

	தமிழ் எழுத்து		සිංහල எழுத்து
I.	அ	-	අ
II.	ஆ	-	ආ
III.	அ+எ (தமிழ் மொழியில் இல்லை)	-	ඇ
IV.	அ+ஏ (தமிழ் மொழியில் இல்லை)	-	ඈ
V.	இ	-	ඉ
VI.	ஈ	-	ඊ
VII.	உ	-	උ
VIII.	ஊ	-	ඌ
IX.	எ	-	එ
X.	ஏ	-	ඒ
XI.	ஐ	-	ඓ
XII.	ஒ	-	ඔ
XIII.	ஓ	-	ඕ
XIV.	ஔ	-	ඖ / ෛඖ

மேலே குறிப்பிட்டிருப்பது தமிழ் எழுத்துக்களுக்கு ஒப்பான சிங்கள எழுத்துக்கள் ஆகும். இதில் முறையே III, IV ஆகிய இலக்கமிடப்பட்ட எழுத்துக்களைக் கவனித்துப்பாருங்கள். இவை தமிழில் இல்லாத ஆனால் சிங்கள மொழியில் காணப்படும் எழுத்துக்கள் ஆகும். ඇ, ඈ என்பன சிங்கள மொழியைப் பொறுத்தவரையில் தனித்தனி எழுத்துக்களாகக் காணப்படுகின்றன. இந்த எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சொற்கள் காணப்படுகின்றன. இந்த எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாம் குறில் மற்றும் நெடில் உச்சரிப்புக்களை கவனத்தில் கொள்ள வேண்டும். எழுத்துக்களை மாத்திரமன்றி வசனங்களை உச்சரிக்கும்போதும் இந்த எழுத்துக்களின் உச்சரிப்பு முறையை தெளிவாக உச்சரிக்க வேண்டும். காரணம் ஓர் சிறிய தவறான எழுத்து உச்சரிப்புப் பிழை முழு வசன அர்த்தத்தையும் மாற்றிவிடக்கூடும்.

உயிர் எழுத்துக்கள் சிங்கள மொழியைப் பொறுத்த அளவில் பெரும்பாலும் ஓர் வசனத்தின் ஆரம்பத்தில் வரும் அல்லது வசனத்தின் இடையே வரும். பொதுவாக ஓர் வசனத்தின் இறுதி எழுத்தாக வருவது அரிதாகும்.

கீழே தரப்பட்டுள்ள உதாரணத்தைக் கவனியுங்கள். அதில் ஓர் வசனம் உருவாகுவதற்கு எவ்வாறாக எழுத்துக்கள் சேர்க்கப்படுகின்றன என்ற விளக்கத்தைத் தருகின்றன.

ර්+උ=රු	**ඔරුව**	ඔ+ර්+උ+ව්+අ
ද්+ඇ=දැ	**උදැල්ල**	උ+ද්+ඇ+ල්+ල
ග්+ඉ=ගි	**ගිනි**	ග්+ඉ+ න්+ඉ

மேலே உள்ள உதாரணங்களை தமிழில் நோக்குவோம்.

- ஒருவ → ஒ+ர்+உ+வ்+அ
- உதல்ல → உ+த்+அ+ல்+ல
- கினி → க்+இ+ன்+இ

தமிழில் உள்ள உதாரணங்களை நோக்குங்கள். அதில் எவ்வாறாக உயிர் எழுத்துக்கள் மற்றும் மெய் எழுத்துக்கள் சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்களை உருவாக்கி ஓர் வசனமாக உண்டாக்கின்றது என்பதை காட்டுகின்றது. இதில் இருந்து உயிர் மற்றும் மெய் எழுத்துக்களின் பயன்பாட்டை அறிந்திருப்பீர்கள்.

தமிழ் மொழியில் நாம் எழுத்துக்களைச் சேர்த்துப் பயன்படுத்துவதைப்போன்றே சில சில வித்தியாசங்களுடன் சிங்கள மொழியிலும் எழுத்துக்கள் சேர்க்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக தமிழில் ***ப்+ஆ=பா*** என எழுத்துக்கள் சேர்ந்து புதிய ஓர் உச்சரிப்புடனான எழுத்தை உருவாக்கி நாம் உபயோகிப்பதைப் போன்றே சிங்களத்திலும் ර්+උ=රු ***(ர்+உ=ரு)*** என எழுத்துக்கள் சேர்ந்து புதிய எழுத்துக்களை உருவாக்குகின்றது. இது வெறுமனே உதாரணத்திற்காக நான் கூறிய எடுத்துக்காட்டுகளாகும்.

பெரும்பாலான எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து புதிய எழுத்துக்களை தோற்றுவித்தும், மாற்றமுற்றும் பயன்படுத்தப்படுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களைக் கவனித்துப் பாருங்கள். அவை முறையே சிங்கள மொழியில் உள்ள உயிர் எழுத்துக்களை குறித்து நிற்கின்றன. அதன் பின்னர் உள்ள பகுதி தரப்பட்ட உயிர் எழுத்துக்களுக்கு ஒப்பான மெய்யெழுத்க்களையும் சேர்த்து எழுதும் போது நாம் பயன்படுத்தும் குறியீடுகளையும் குறிப்பிடுகின்றது. அதற்கு அடுத்த பகுதியானது அந்த எழுத்துக்களுக்கான சிங்கள பெயர்களை குறிக்கின்றது. குறிப்பாக சிங்களப் பெயர்களைக் குறிக்கின்றது. மற்றய பகுதியில் அந்த குறியீடுகளுக்கு ஒப்பான தமிழ் உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.



சிங்கள உயிர் எழுத்துக்கள், குறியீடுகள், குறியீடுகளின் பெயர்கள் மற்றும் உதாரணங்கள் என்பன தரப்பட்டுள்ளன.

අ – இதற்கு குறியீடு இல்லை. எனவே சாதாரண மெய் எழுத்துக்களுடன் சேர்ந்து எழுத்துக்கள் உருவாகும். உதாரணம்: **කවිය**, **රජයන**, **ගහ**

ආ – **ා** – இந்தக் குறியீடு ඇලපිල්ල (அலபில்ல) என அழைக்கப்படும்.

உதாரணம்: **කාය**, **රාජිත**, **මාලය**

ඇ – ැ – இந்தக் குறியீடு කෙටි ඇලපිල්ල (கெடி அலபில்ல) என அழைக்கப்படும்.

உதாரணம்: **කැඳ**, **පැණි**

ඈ – ෑ – இந்தக் குறியீடு දිග ඇලපිල්ල (திக அலபில்ல) என அழைக்கப்படும்.

உதாரணம்: **කෑම**, **ඈත**

ඉ – **ි** – இந்தக் குறியீடு ඉස්පිල්ල (இஸ்பில்ல) என அழைக்கப்படும்.

உதாரணம்: **කිතුල**, **මඩිකි**, **පිහිරි**

ඊ – ී – இந்தக் குறியீடு දිග ඉස්පිල්ල (திக இஸ்பில்ல) என அழைக்கப்படும்.

உதாரணம்: **කීර්තිය, නීති**

උ – ු – இந்தக் குறியீடு කෙටි පාපිල්ල (கெடி பாபில்ல) என அழைக்கப்படும்.

உதாரணம்: **තුෂාර, වතුර**

ඌ – ූ – இந்தக் குறியீடு දිග පාපිල්ල (திக பாபில்ல) என அழைக்கப்படும்.

உதாரணம்: **කූර, රූප**

එ – ෙ – இந்தக் குறியீடு කොම්බුව (கொம்புவ) என அழைக்கப்படும்.

உதாரணம்: **නෙත, මෙත, පෙල**

ඒ – ේ – இந்தக் குறியீடு කොම්බුව සහ දිග සලකුණ (கொம்புவ சக திக சலகுண) என அழைக்கப்படும்.

உதாரணம்: **වේද, සේන, දේව**

ඓ – **ෛ** – இந்தக் குறியீடு කොම්බුව දෙක *(கொம்புவ தெக)* என அழைக்கப்படும்.
உதாரணம்: **වෛද්‍ය, වෛර, වෛභව**

ඔ – **ො** – இந்தக் குறியீடு කොම්බුව සහ ඇලපිල්ල *(கொம்புவ சக அலபில்ல)* என அழைக்கப்படும். *உதாரணம்:* **පොත, කොට, සොය**

ඕ – **ෝ** – இந்தக் குறியீடு කොම්බුව සහ දිග සලකුණ සමග ඇලපිල්ල *(கொம்புவ சக திக சலகுண சமக அலபில்ல)* என அழைக்கப்படும்.
உதாரணம்: **දෝෂ, හෝටල්**

ඖ – **ෞ** – இந்தக் குறியீடு කොම්බුව සහ යනුනු කීන *(கொம்புவ சக யனுனு கீன)* என அழைக்கப்படும்.
உதாரணம்: **ඖෂධ, කෞතුක, සෞඛ්‍ය**

சிங்கள மெய் எழுத்துக்கள்

சிங்கள மெய் எழுத்துக்களின் வரிசை கீழே தரப்பட்டுள்ளது. அதன்படி சில எழுத்துகளுக்கு அதாவது ஒரு எழுத்திற்கே இரண்டு அல்லது மூன்று எழுத்துக்கள் எழுதப்படுவதனை அவதானித்துப் பாருங்கள். குறிப்பாக 5 ஆம் இலக்கமிடப்பட்ட எழுத்தை கவனித்துப்பாருங்கள். இந்த உச்சரிப்பில் எமக்கு கிட்டத்தட்ட மூன்று சிங்கள எழுத்துக்கள் உள்ளன. இவ்வாறாக சில எழுத்துக்கள் தமக்கே உரிய தனித்தன்மையுடன் காணப்படும் என்பது தெளிவாகின்றது. கீழ்வரும் பகுதியில் உங்களுக்கு மெய் எழுத்துக்களுக்கு சார்பான உயிர்மெய் எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. உதாரணமாக க் எனும் மெய் எழுத்து வர வேண்டிய இடத்தில் உங்கள் கற்றலை இலகுவாக்க என தந்துள்ளேன்.

	தமிழ் எழுத்து		சிங்கள எழுத்து		உச்சரிப்பு
(1)	க	-	ක	-	*ka*
(2)	க்ஹ	-	ඛ	-	*kha*
(3)	க / *g*	-	ග	-	*ga*
(4)	ங்ஹ	-	ඝ	-	*gha*
(5)	ங் + க	-	ඞ / ඟ / ඬ	-	ṅ*ga*
(6)	ச	-	ච	-	*ca / cha*
(7)	ச்ஹ	-	ඡ	-	*chha*
(8)	ஜ	-	ජ	-	*ja*
(9)	ஜ்ஹ	-	ඣ	-	*jha*
(10)	ஞ	-	ඤ	-	*ña*
(11)	ட	-	ට	-	ṭ*a*
(12)	ட்ஹ	-	ඨ	-	ṭ*ha*
(13)	ட	-	ඩ	-	ḍ*a*
(14)	ட்ஹ	-	ඪ	-	ḍ*ha*
(15)	ண	-	ණ	-	ṇ*a*
(16)	த	-	ත	-	*ta*
(17)	த்ஹ	-	ථ	-	*tha*

	தமிழ் எழுத்து		சிங்கள எழுத்து		உச்சரிப்பு
(18)	த	-	ද	-	*da*
(19)	த்ஹ	-	ධ	-	*dha*
(20)	ந	-	න	-	*na*
(21)	ப	-	ප	-	*pa*
(22)	ப்ஹ	-	ඵ	-	*pha*
(23)	ப	-	බ	-	*ba*
(24)	ப்ஹ	-	භ	-	*bha*
(25)	ம	-	ම	-	*ma*
(26)	ய	-	ය	-	*ya*
(27)	ர	-	ර	-	*ra*
(28)	ல	-	ල	-	*la*
(29)	வ	-	ව	-	*va*
(30)	ஶ	-	ශ	-	*Śa*
(31)	ஷ	-	ෂ	-	*Ṣa*
(32)	ஸ	-	ස	-	*sa*
(33)	ஹ	-	හ	-	*ha*
(34)	ள	-	ළ	-	*ḷa*
(35)	ஃப	-	ෆ	-	*fa*

சிங்கள உயிர்மெய் எழுத்துக்கள்

சிங்கள மொழியில் தமிழ் மொழியைப்போன்றே உயிர் மெய் எழுத்துக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக உயிர் எழுத்துக்கள் மற்றும் மெய் எழுத்துக்களின் கலவையாக இவை காணப்படுகின்றன. கீழே உங்களுக்காக சில முக்கியமான சிங்கள எழுத்துக்களை தந்துள்ளேன். இவை உங்களது மேலதிக அறிவு மற்றும் கற்றலை ஊக்கப்படுத்தவே ஆகும். இதில் உதாரணமாக க என எழுதப்பட்டு அதன் கீழ் பல எழுத்துக்கள் தரப்பட்டிருக்கும். நான் ஏற்களவே குறிப்பிட்டதைப்பால சிங்கள எழுத்துக்கள் ஒலி வடிவங்களுக்கெனத் தனித்தனியான எழுத்துரு வடிவங்களைக் கொண்டுள்ளன. எனவே க என குறிப்பிடும்போது க வரிசையில் உள்ள ஒலி வடிவங்களில் மாற்றம் காணப்படும் பெரும்பாலான எழுத்துக்களைத் தந்துள்ளேன். இவற்றின் தொனி வடிவங்கள் மாறுபடக்கூடியன.

අ ආ ඇ ඈ ඉ ඊ උ ඌ එ ඒ ඓ ඔ ඕ ඖ

க

ක – කා – කැ – කෑ – කි – කී – කු – කූ – කෙ – කේ – කෛ – කො – කෝ – කෞ

ඛ – ඛා – ඛැ – ඛෑ – ඛි – ඛී – ඛු – ඛූ – ඛෙ – ඛේ – ඛෛ – ඛො – ඛෝ – ඛෞ

ග – ගා – ගැ – ගෑ – ගි – ගී – ගු – ගූ – ගෙ – ගේ – ගෛ – ගො – ගෝ – ගෞ

ඝ – ඝා – ඝැ – ඝෑ – ඝි – ඝී – ඝු – ඝූ – ඝෙ – ඝේ – ඝෛ – ඝො – ඝෝ – ඝෞ

ඟ (ඞ) – ඞා – ඞැ – ඞෑ – ඞි – ඞී – ඞු – ඞූ – ඞෙ – ඞේ – ඞෛ – ඞො – ඞෝ – ඞෞ

ச

ච – චා – චැ – චෑ – චි – චී – චු – චූ – චෙ – චේ – චෛ – චො – චෝ – චෞ

ඡ – ඡා – ඡැ – ඡෑ – ඡි – ඡී – ඡු – ඡූ – ඡෙ – ඡේ – ඡෛ – ඡො – ඡෝ – ඡෞ

ஜ

ජ – ජා – ජැ – ජෑ – ජි – ජී – ජු – ජූ – ජෙ – ජේ – ජෛ – ජො – ජෝ – ජෞ

ஞ

ඤ – ඤා – ඤැ – ඤෑ – ඤි – ඤී – ඤු – ඤූ – ඤෙ – ඤේ – ඤෛ – ඤො – ඤෝ – ඤෞ

ඥ – ඥා – ඥැ – ඥෑ – ඥි – ඥී – ඥු – ඥූ – ඥෙ – ඥේ – ඥෛ – ඥො – ඥෝ – ඥෞ

ட

ට – ටා – ටැ – ටෑ – ටි – ටී – ටු – ටූ – ටෙ – ටේ – ටෛ – ටො – ටෝ – ටෞ

ඨ – ඨා – ඨැ – ඨෑ – ඨි – ඨී – ඨු – ඨූ – ඨෙ – ඨේ – ඨෛ – ඨො – ඨෝ – ඨෞ

ඩ – ඩා – ඩැ – ඩෑ – ඩි – ඩී – ඩු – ඩූ – ඩෙ – ඩේ – ඩෛ – ඩො – ඩෝ – ඩෞ

ඪ – ඪා – ඪැ – ඪෑ – ඪි – ඪී – ඪු – ඪූ – ඪෙ –
ඪේ – ඪෛ – ඪො – ඪෝ – ඪෞ

ண

ණ – ණා – ණැ – ණෑ – ණි – ණී – ණු – ණූ –
ණෙ – ණේ – ණෛ – ණො – ණෝ – ණෞ

த

ත – තා – තැ – තෑ – ති – තී – තු – තූ – තෙ –
තේ – තෛ – තො – තෝ – තෞ

ථ – ථා – ථැ – ථෑ – ථි – ථී – ථු – ථූ – ථෙ –
ථේ – ථෛ – ථො – ථෝ – ථෞ

ද – දා – දැ – දෑ – දි – දී – දු – දූ – දෙ – දේ –
දෛ – දො – දෝ – දෞ

ධ – ධා – ධැ – ධෑ – ධි – ධී – ධු – ධූ – ධෙ –
ධේ – ධෛ – ධො – ධෝ – ධෞ

ன

න – නා – නැ – නෑ – නි – නී – නු – නූ – නෙ
– නේ – නෛ – නො – නෝ – නෞ

ப

ප — පා — පැ — පෑ — පි — පී — පු — පූ — පෙ — පේ — පෛ — පො — පෝ — පෞ

ඵ — ඵා — ඵැ — ඵෑ — ඵි — ඵී — ඵු — ඵූ — ඵෙ — ඵේ — ඵෛ — ඵො — ඵෝ — ඵෞ

බ — බා — බැ — බෑ — බි — බී — බු — බූ — බෙ — බේ — බෛ — බො — බෝ — බෞ

හ — හා — හැ — හෑ — හි — හී — හු — හූ — හෙ — හේ — හෛ — හො — හෝ — හෞ

ம

ම — මා — මැ — මෑ — මි — මී — මු — මූ — මෙ — මේ — මෛ — මො — මෝ — මෞ


ய

ය — යා — යැ — යෑ — යි — යී — යු — යූ — යෙ — යේ — යෛ — යො — යෝ — යෞ

ர

ර — රා — රු — රූ — රි — රී — රැ — රෑ — රෙ — රේ — රෛ — රො — රෝ — රෞ

ල ල – ලා – ලැ – ලෑ – ලි – ලී – ලු – ලූ – ලෙ – ලේ – ලෛ – ලො – ලෝ – ලෞ
ව ව – වා – වැ – වෑ – වි – වී – වු – වූ – වෙ – වේ – වෛ – වො – වෝ – වෞ
ෂ ශ – ශා – ශැ – ශෑ – ශි – ශී – ශු – ශූ – ශෙ – ශේ – ශෛ – ශො – ශෝ – ශෞ



அடிப்படைச் சிங்களச் சொற்கள்

ஓர் மொழியை எடுத்துக்கொண்டால் தேவையான சொற்கள், தேவையற்ற சொற்கள் என நாம் எதனையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. காரணம் ஒரு மொழியில் உள்ள அனைத்து சொற்களுமே மிக முக்கியமானவைதான்.

அடிப்படைச் சிங்களச் சொற்களென நாம் நோக்கும்போது மிக முக்கியமான சிங்கள வாக்கியங்கைளை அடிப்படைச் சிங்களச் சொற்கள் என நாம் எடுத்துக்கொள்ளலாம். குறிப்பாக தமிழ் மொழியில் தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களைச் சேர்த்து மூவிடப்பெயர்கள் என்பர். தன்மை, முன்னிலை மற்றும் படர்க்கை என்றவாறாக காணப்படுகின்ற இச் சொற்களை நாம் அடிப்படைச் சொற்கள் என முதலில் எடுத்துக்கொள்வோம். இந்தச் சொற்களை நாம் பயன்படுத்தி வசனங்களை உருவாக்கிக்கொள்ள முடியும். அத்துடன் அவை வசனங்களை உருவாக்க மிக அடிப்படையாக பயன்படும் சொற்களாகும்.

தன்னைக் குறிப்பது தன்மைப் பெயர் எனப்படும். உதாரணமாக: ***நான், நாங்கள், நாம்*** *போன்ற வசனங்களைக் குறிப்பிடலாம். முன்னால் உள்ளவரைக் குறிப்பிடப் பயன்படுத்துவது முன்னிலைப் பெயர் எனப்படும். உதாரணமாக:* ***நீ, நீங்கள், நின்*** *போன்ற வசனங்களைக் குறிப்பிடலாம். பிறரைக் குறிப்பிடப் பயன்படுத்துவது படர்க்கைப் பெயர் எனக் குறிப்பிடலாம். உதாரணமாக:* ***அவன், அவள், அவர்கள்****. இவை சிங்கள மொழிக்கு அடிப்படையான சொற்கள் என நாம் எடுத்துக்கொள்ளலாம்.*

இவன் – මෙයා / මෙතුමා – அருகில் உள்ள நபரை குறிப்பிட்டுச் சொல்லப் பயன்படுத்தும் சொல்லாகும். இந்த மனிதர் என்பது இதன் அர்த்தமாகும்.

அவன் – ඔහු / අයෙක් – தூரத்தில் உள்ள நபரை குறிப்பிட்டுச் சொல்லப் பயன்படுத்தும் சொல்லாகும். அந்த மனிதர் என்பது இதன் அர்த்தமாகும்.

எவன் – කවුද (මේ) / කවුද (ඒ) – இது ஓர் கேள்வி சார் சொல்லாகும். யார்? (எந்த மனிதர்?) என்பது இதன் அர்த்தமாகும்.

இது – මේ – அருகிலுள்ள பொருட்களை குறிப்பாக அஃறிணைப் பொருட்களை குறிக்கப் பயன்படுத்தும் சொல் இதுவாகும். இதன் அர்த்தம் இது என்பதாகும்

அது – ඒ – தூரத்தில் உள்ள பொருட்களைக் குறிப்பாக அஃறிணைப் பொருட்களைக் குறிக்கப் பயன்படுத்தும் சொல்லாகும். இதன் அர்த்தம் அது என்பதாகும்.

எது – මොනවාද? / කුමක්ද? – இது வினா சார்ந்த சொல்லாகும். இதன் அர்த்தம் எது? / என்ன? என்பதாகும்.

இங்கே – මේකේ / මෙහි / මෙතැන – *Here (near)*

